பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

12 08 2026 WEDNESDAY 6 30 PM

வணக்கம்-மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) வெளிநாட்டு நன்கொடை ஒழுங்குமுறை சட்டத் திருத்த மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் ஆய்வுக்கு அனுப்ப மக்களவை பரிந்துரைத்துள்ளது.

2) நீட் தேர்வு தொடர்பாக மாணவர்கள் நடத்திய போராட்டம் குறித்து விவாதிக்க மத்திய அரசு தயாராக உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3) உலகை நேர்மறையாக மாற்றும் வல்லமை இளையோரிடம் மட்டுமே உள்ளதாக முதலமைச்சர் திரு. விஜய் தெரிவித்துள்ளார்.

4) தொகுதி மறுவரையறைக்கு எதிரான த.வெ.க. அரசின் தீர்மானம், தமிழக நலனுக்கு எதிரானது என்று பிஜேபி கூறியுள்ளது.

5) ஆசிய இளையோர் பளு தூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Abhinav Gogoi இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றார்.

>>>>><<<<<

வெளிநாட்டு நன்கொடை ஒழுங்குமுறை சட்டத் திருத்த மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் ஆய்வுக்கு அனுப்ப மக்களவை பரிந்துரைத்துள்ளது.

மக்களவையில் இதற்கான தீர்மானத்தை உள்துறை இணையமைச்சர் திரு. நித்யானந்த் ராய், தாக்கல் செய்து பேசினார்.

இந்த குழுவில் 31 உறுப்பினர்கள் இடம்பெறுவார்கள் என்று அவர் கூறினார்.

மக்களவையிலிருந்து 21 உறுப்பினர்களும், மாநிலங்களவையிலிருந்து 10 உறுப்பினர்களும் இதில் இடம்பெறுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இக்குழு தனது அறிக்கையை நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரின் முதல்வாரத்தின் கடைசி நாளில் சமர்ப்பிக்கும் என்றும் திரு. நித்யானந்த் ராய் கூறினார்.

>>>>><<<<<

நீட் தேர்வு தொடர்பாக மாணவர்கள் நடத்திய போராட்டம் குறித்து விவாதிக்க மத்திய அரசு தயாராக உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களோடு ஆலோசனை நடத்தி, இந்த விவாதத்திற்கு நேரம் ஒதுக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த விவாதம் முழுவதிலும் தாம் பங்கேற்று, பதிலளிக்க தயாராக உள்ளதாகவும் திரு. அமித் ஷா அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

உலகை நேர்மறையாக மாற்றும் வல்லமை இளையோரிடம் மட்டுமே உள்ளதாக முதலமைச்சர் திரு. விஜய் கூறியுள்ளார்.

சர்வதேச இளையோர் தினம் இன்று கொண்டாடப்பட்டதை ஒட்டி, வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

புதிய எண்ணங்கள், அஞ்சா நெஞ்சம் மற்றும் முடிவில்லா ஆற்றல் இளையோரிடம் உள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

சோதனைகளை வென்று, சாதனைகள் படைத்து, தொடர்ந்து முன்னேற்றம் காணுமாறும் திரு. விஜய் கூறியுள்ளார்.

>>>>><<<<<

தொகுதி மறுவரையறைக்கு எதிரான த.வெ.க. அரசின் தீர்மானம், தமிழக நலனுக்கு எதிரானது என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், த.வெ.க அரசின் இந்த நடவடிக்கை, ஜனநாயகத்தின் மாண்பினை சிதைக்கும் முயற்சியாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்கள்தொகைக்கு ஏற்ப தொகுதிகள் பிரிக்கப்படும் போது தான், நாட்டு மக்களின் குரல் சமமான வலிமையுடன் நாடாளுமன்றத்தில் ஒலிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தொகுதி மறுவரையறை என்பது வெறும் எல்லைகளை பிரிப்பதல்ல என்றும், மக்களின் உண்மையான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனை கருத்தில் கொண்டு த.வெ.க. அரசு, தமது முடிவினை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

>>>>><<<<<

தொகுதி மறுவரையறை தொடர்பாக, மத்திய அரசு எந்தவொரு மசோதாவையும் கொண்டு வராத நிலையில், அதனை எதிர்த்து தமிழக சட்டப்பேரவையில் இன்று

நிறைவேற்றப்பட்டிருக்கும் அரசினர் தீர்மானம் அவசியமற்றது என்று அமமுக பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாடாளுமன்றத்தில் தற்போதுள்ள தமிழகத்தின் பிரதிநிதித்துவம் 7 புள்ளி ஒன்று எட்டு சதவீதத்திலிருந்து 7 புள்ளி இரண்டு மூன்று சதவீதமாக அதிகரிக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெளிவுபடுத்தியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் பின்னரும், தொகுதி மறுவரையறையால் தமிழகம் பாதிக்கும் என்ற விஷமத்தனமான பிரச்சாரத்தை த.வெ.க. அரசு திட்டமிட்டு பரப்புவது கண்டனத்திற்குரியது என்றும் திரு. டி.டி.வி. தினகரன் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

>>>>><<<<<

சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது, சாதிகள் பட்டியலிலிருந்து சாதியை தேர்ந்தெடுத்து நிரப்பும் முறையை மத்திய அரசு கடைபிடிக்க வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த கணக்கெடுப்பின் போது, பொதுமக்கள் தெரிவிக்கும் தகவலை அப்படியே நிரப்பும் முறையை கடைபிடித்தால், தேவையற்ற குழப்பங்கள் ஏற்படும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

சேலம் மாவட்டம், தலைவாசல் பகுதியைச் சேர்ந்த சரக்கு வாகன ஓட்டுநரின் மகன் தரணீஷ், நீட் தேர்வில் அரசு பள்ளி மாணவருக்கான 7 புள்ளி 5 சதவீத இடஒதுக்கீட்டில், மாநில அளவில் இரண்டாம் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

ஏழை எளிய நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களும் மருத்துவராகும் வாய்ப்பினை நீட் தேர்வு உருவாக்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 48 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மத்திய மக்கள் தொடர்பகம் சார்பில், அரசின் நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

>>>>><<<<<

மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில், மூன்று நாள் தேசிய புவி அறிவியல் தின விழா இன்று தொடங்கியது.

>>>>><<<<<

கடலூர் மாவட்டம், சிலம்பிமங்களத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

>>>>><<<<<

திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை மாநகராட்சி அதிகாரிகள் இன்று அகற்றினர்.

>>>>><<<<<

ஈரோடு மாவட்டம், பண்ணாரி அம்மன் கோவிலில் ஆடி அமாவாசையை முன்னிட்டு, இன்று சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

>>>>><<<<<

உதகையில் நிறைவான மழை வேண்டி, இஸ்லாமியர்கள் சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர்.

>>>>><<<<<

தூத்துக்குடி மாவட்டம், காமநாயக்கன்பட்டியில் உள்ள புனித பரலோக மாதா பேராலயத்தின் விண்ணேற்பு பெருவிழா நாளைமறுநாள் கொண்டாடப்படுவதை ஒட்டி, அம்மாவட்டத்திற்கு அன்றைய தினம் உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய இளையோர் பளு தூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Abhinav Gogoi இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றார்.

தாஷ்கண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 75 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், 7 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களுடன், பதக்கப்பட்டியலில் 7வது இடத்தில் உள்ளது.

>>>>><<<<<

காமன்வெல்த் வாள்வீச்சு சாம்பியன் போட்டியில் இந்தியா 3 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

நைஜீரியாவின் Lagos-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில், Karan Singh, Rajendran Shanthimol Sherjin மற்றும் Kanaga Lakshmi தங்கப்பதக்கம் வென்றனர்.

Joys Ashitha வெள்ளிப்பதக்கத்தையும், Kumaresan Padma Gasho Nidhi வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 8 தங்கம், 7 வெள்ளி, 14 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

>>>>><<<<<

Odense சர்வதேச பாரா சைக்கிள் சாம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கம் உட்பட 12 பதக்கங்களை கைப்பற்றியது.

டென்மார்க்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவில் Arshad Shaikh 2 தங்கம், 3 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றார்.

Anshuman Dhumal இரண்டு வெள்ளிப்பதக்கங்களை கைப்பற்றினார்.

மகளிர் பிரிவில் Vishwa Vasani 4 வெண்கலப்பதக்கங்களை வென்றார்.

>>>>><<<<<

கொல்கத்தாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Suraj Kumar Chand அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 11-8, 10-12, 11-1, 11-6 என்ற செட்கணக்கில் இந்தியாவின் Om Semwal-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிச் சுற்று ஆட்டத்தில் Tanvi Khanna 11-9, 11-6, 11-5 என்ற செட்கணக்கில் இந்தியாவின் Nirubama Dubey-யை வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

>>>>><<<<<

மலேசியாவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Patri காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அவர், 21-10, 21-12 என்ற செட்கணக்கில் சவுதி அரேபியாவின் Khadijah Kawthar-ஐ வென்றார்.

இப்போட்டியில் Rujula Ramu, Tasnim Mir, Aditya Tripathi, Rithvik Sanjeevi Satishkumar ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில், Lalramsanga – Shravani Walekar இணையும், Divyam Arora – Aditi Bhatt இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

*>>>>><<<<<*

*Missouri-ல் நடைபெற்று வரும் Sinquefield கோப்பைக்கான செஸ் போட்டியின் இரண்டாவது சுற்று முடிவில், இந்தியாவின் Praggnanandhaa முதலிடத்தில் உள்ளார்.*

----------------

*மலேசியாவுக்கு எதிரான 21 வயதுக்குட்பட்டோருக்கான நான்காவது ஹாக்கிப் போட்டியில் இந்தியா ஐந்துக்கு ஒன்று என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.*

*>>>>>end<<<<<*